**ஆகஸ்ட் – 08**

# TNPSC துளிகள்

- ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் உள்ள க்ராஷென்னினிகோவ் எரிமலையானது 600 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு, 8.8 ரிக்டர் அளவிலான நில நடுக்கத்தைத் தொடர்ந்து முதல் முறையாக வெடித்தது.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை நடைபெற்ற முஸ்கான்-XI நடவடிக்கையின் கீழ் சைபராபாத் (தெலுங்கானா) காவல்துறையினரால் குழந்தைத் தொழிலாளர், பிச்சை எடுத்தல் மற்றும் சட்டவிரோத வேலைகளில் இருந்து மொத்தம் 1,374 குழந்தைகள் மீட்கப்பட்டனர்.
- விளையாட்டுத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கின்ற வகையில், இந்தியாவின் முதல் உரிமையாளர் நிறுவனங்கள் அடிப்படையிலான வில்வித்தை லீக் போட்டியானது அக்டோபர் மாதத்தில் புது டெல்லியில் தொடங்க உள்ளது.
- அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு (AIFF) மற்றும் தெலுங்கானா அரசு ஆகியவை ஐதராபாத்தில் உள்ள கச்சிபவுலி மைதானத்தில் இந்தியாவின் முதல் மகளிருக்கான FIFA திறன் மேம்பாட்டு கழகத்தினைத் தொடங்குவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் தென் சீனக் கடலில் தங்கள் முதல் இருதரப்புக் கூட்டுக் கடற்படைப் பயிற்சியை நடத்தின.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பாதுகாப்புத் துறை சார்ந்த கண்டுபிடிப்புகளுக்கான AGNISHODH





- இந்திய இராணுவம் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தன்னிறைவை அதிகரிப்பதற்காக AGNISHODH எனும் இந்திய இராணுவ ஆராய்ச்சி மையத்தினை (IARC) தொடங்கியுள்ளன.
- நவீனமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப உள்ளடக்கத்தின் இராணுவ மாற்றத் திட்டத்தின் கீழான செயல்பாட்டுத் தேவைகளுடன் கல்வி ஆராய்ச்சியை

ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த மையமானது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சி பூங்காவின் மேம்பட்ட உற்பத்தி தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் (AMTDC) மற்றும் பிரவர்தக் தொழில்நுட்பங்கள் அறக்கட்டளையுடன் இதற்கான ஒத்துழைப்பினை மேற்கொள்ளும்.
- கூட்டு உற்பத்தி, இணையவெளிப் பாதுகாப்பு, துளிமக் கணினி, கம்பிவடமற்ற தொடர்பு மற்றும் ஆளில்லா வான்வழி அமைப்புகள் போன்ற துறைகளில் இராணுவ வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- விக்ஸித் பாரத் 2047 என்ற கொள்கையை நோக்கிய இந்தியாவின் முன்னேற்றத்தை ஆதரிக்கும் வகையில், AGNISHODH கல்வித் திறனைப் போர்க்களக் கண்டுபிடிப்பாக மாற்றும்.

# தேசியச் செய்திகள்

## காற்றாலை ஆற்றல் மற்றும் பறவைகளின் மரணம்




- 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியா 3.5-ஜிகாவாட் (GW) அளவிலான காற்றாலை ஆற்றல் திறனை நிறுவியது என்பதோடு இது 82 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது மற்றும் அதன் மொத்தத் திறனை 51.3 GW ஆக உயர்த்தியது.
- இராஜஸ்தானின் ஜெய்சல்மரில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) நடத்திய ஆய்வில், சுமார் 3,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட ஏழு கணக்கெடுப்புகளில் 90 டர்பைன்களுக்கு (விசையாழிகள்) அருகில் 124 இறந்த பறவைகளின் சடலங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.
- கண்டறிதலில் பிழைகள் மற்றும் பிற ஊனுண்ணிகளின் இடையீடுகளை சரி செய்த பிறகு, மதிப்பிடப் பட்ட வருடாந்திரப் பறவை இறப்பு 1,000 சதுர கிலோமீட்டருக்கு 4,464 பறவைகளாக உள்ளது.
- கட்டுப்பாட்டுத் தளங்களில் எந்தப் பறவைகளின் உடலும் காணப்படவில்லை என்ற நிலையில் இது காற்றாலைகளைப் பறவைகளின் குறிப்பாக கழுகுகளின் (ராப்டர்கள்) உயிரிழப்புகளுக்கு முக்கியக் காரணமாக உறுதிப்படுத்துகிறது.
- இறக்கைகளுக்கு வர்ணம் பூசுதல், குறிப்பிட்ட கால இடைவெளி அடிப்படையில் விசையாழிகளின் செயல்பாட்டினை இடை நிறுத்தல் மற்றும் எரிசக்தித் திட்டமிடலுக்கான காற்று உணர்வுக் கருவியைப் (AVISTEP) பயன்படுத்தி தளத் தேர்வு

செய்வது மூலம் பறவைகளின் உயிரிழப்பினைக் குறைக்கலாம் என்று நிபுணர்கள் பரிந்துரைத்தனர்.

- பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல் உருவாக்கிய AVISTEP, பாதுகாப்பான திட்டம் சார்ந்த திட்டமிடலுக்காக குறைவான பறவை உயிரிழப்புகள் முதல் மிக அதிகமான பறவை உயிரிழப்புகள் உள்ள பகுதிகளை அடையாளம் காண உதவுகிறது.
- குஜராத் மற்றும் தமிழ்நாட்டில் 4 GW ஆலைகளுக்கான பணிகள் தொடங்கப் பட்டு உள்ளதுடன், 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 30 GW அளவிலான கடற்கரை சார்ந்த காற்று ஆற்றல் உற்பத்தித் திறனை எட்டத் திட்டமிட்டுள்ளது.

## பிரதமரின் பரிக்சா பே சர்ச்சா




- பிரதமரின் பரிக்சா பே சர்ச்சா (PPC) இயக்கமானது, குடிமக்கள் ஈடுபாட்டுத் தளத்தில் ஒரு மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பதிவு செய்யப்பட்டதற்காக கின்னஸ் உலக சாதனை படைத்தது.
- இந்தத் திட்டத்தின் எட்டாவது இயக்கமானது 3.53 கோடி என்ற அளவில் செல்லுபடி ஆகும் பதிவுகளைப் பெற்றது.
- PPC திட்டமானது தேர்வு சார்ந்த மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும், நேர்மறையான கற்றலை ஊக்குவிப்பதற்காகவும் என்று பிரதமர் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் நேரடியாக தொடர்புகொள்வதை உள்ளடக்கியது.
- இந்த முன்னெடுப்பானது தேர்வுப் பருவத்தை நேர்மறை, ஆக்கப்பூர்வமான மற்றும் நோக்கமுள்ள கற்றலின் திருவிழாவாக மாற்றுகிறது.
- PPC நிகழ்வின் முதல் இயக்கமானது 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- எட்டாவது இயக்கத்தில் நடிகை தீபிகா படுகோன், குத்துச்சண்டை வீரர் MC மேரி கோம் மற்றும் ஆன்மீகத் குரு சத்குரு போன்ற பிரபலங்கள் இடம் பெற்றிருந்தனர்.

## DPCC மற்றும் Lodhi Property Co Ltd வழக்கு

- மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் (PCBs) ஆனது 33A (நீர் சட்டம்) மற்றும் 31A (காற்றுச் சட்டம்) ஆகிய பிரிவுகளின் கீழ் மறுசீரமைப்பு மற்றும் இழப்பீடுகளாக நிலையான தொகைகளை விதித்து, வசூலிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களும் சாத்தியமான சுற்றுச்சூழல் சேதத்தைத்

தடுப்பதற்கான முன்கூட்டிய நடவடிக்கைகளாக வங்கி உத்தரவாதங்களைக் கோரலாம்.

- அத்தகைய சேதங்களுக்கான தண்டனை விதிக்கும் அதிகாரம் துணைச் சட்டத்தில் விதிக்கப் பட்ட இயற்கை நீதியை உறுதி செய்யும் விரிவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் VI மற்றும் VIIவது அத்தியாயங்களின் கீழான சட்டப் பூர்வ நடைமுறைகள் தேவைப்படும் தண்டனைக்குரிய அபராதங்களிலிருந்து மறு சீரமைப்புச் சேதங்களை நீதிமன்றம் வேறுபடுத்தியது.
- மாசுபடுத்தும் அமைப்புகள் ஆனது கட்டணக் கொள்கைகள் சுற்றுச்சூழல் சேதம், தீர்வு நடவடிக்கை மற்றும் மாசுபாட்டைத் தவிர்ப்பதற்கான ஒரு இழப்பீட்டை மிக நியாயப் படுத்துகிறது.
- PCB வாரியங்கள் உண்மையான சேதத்திற்குப் பிறகு அல்லது சாத்தியமான சுற்றுச் சூழல் தீங்கு ஏற்படும் போது முன்கூட்டியே செயல்படலாம்.
- 33A மற்றும் 31A ஆகிய பிரிவுகளின் கீழ் உள்ள அதிகாரங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 5வது பிரிவைப் போலவே உள்ளன என்பதோடு இது கட்டணம் செலுத்துதல் மற்றும் தீர்வுப் பயன்பாட்டிற்கான வழிமுறைகளை செயல்படுத்துகிறது.
- PCB வாரியங்களின் அதிகாரங்கள் குறித்த உயர் நீதிமன்றத்தின் வரையறுக்கப்பட்ட விளக்கம் தற்போது ரத்து செய்யப்பட்டது.
- தன்னிச்சையற்றத் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையால் வழி நடத்தப்படும் அபராதங்களை விதிக்கலாமா, மீட்டெடுப்பைக் கோரலாமா அல்லது இரண்டையும் மேற்கொள்ளலாமா என வாரியங்கள் தீர்மானிக்க வேண்டும்.
- DPCC வழங்கிய காரணக் கேட்பு அறிக்கைகளை செல்லாததாக்கிய உயர் நீதிமன்றத்தின் உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.




## சவல்கோட் நீர்மின் நிலையம்

- ஜம்மு காஷ்மீரில் உள்ள செனாப் நதியில் 1,856 மெகாவாட் திறன் கொண்ட சவல்கோட் நீர்மின் நிலையத் திட்டத்தினை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- 209.80 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டமானது ஒன்றியப் பிரதேசத்தில் அமைக்கப் பட உள்ள மிகப்பெரிய நீர்மின் நிலையமாகும்.
- சவல்கோட் திட்டம் முதன் முதலில் 1960 ஆம் ஆண்டுகளில் முன்மொழியப்பட்டது.

- ஏப்ரல் 22 ஆம் தேதியன்று, பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, ஜீலம் மற்றும் செனாப் நதிகள் மீது முழுக் கட்டுப்பாட்டையும் பெற்று, 1960 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தினை இந்தியா இடைநிறுத்தியது.
- ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக முன்னர் நிறுத்தப்பட்ட துல்புல் வழிசெலுத்தல் திட்டத்தினை (உல்லார் தடுப்பணை) மீண்டும் தொடங்கவும் அரசாங்கம் திட்டமிட்டு உள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-பர்மா ராம்சர் முன்னெடுப்பு




- இந்திய-பர்மா ராம்சர் பிராந்திய முன்னெடுப்பு (IBRRI) ஆனது கம்போடியா, லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு (லாவோ PDR), மியான்மர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகியவற்றின் ராம்சர் தேசிய மைய அமைப்புகளால் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) ஆசியப் பிராந்திய அலுவலகத்துடன் இணைந்து உருவாக்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பினை IUCN அமைப்பின் நதிப் பேச்சுவார்த்தை மற்றும் ஆளுகை கட்டமைப்புத் திட்டம் (BRIDGE) ஆதரிக்கிறது.
- ஒருங்கிணைந்தப் பிராந்திய நடவடிக்கையின் மூலம் ராம்சர் உடன்படிக்கையின் மூலோபாயத் திட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதை IBRRI நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ராம்சர் உடன்படிக்கைக்கான பங்குதார நாடுகளின் மாநாட்டின் (COP15) பதினைந்தாவது கூட்டத்தில், IBRRI ஆனது 2025 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு

வரையிலான அதன் மூலோபாயத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

- இந்தத் திட்டமானது உறுப்பினர் நாடுகளில் ஈரநில இழப்பை நிறுத்தவும், மாற்றி அமைக்கவும் ஒரு பன்னாட்டுக் கட்டமைப்பை அமைக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குறுகிய நாள் 2025

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியானது, நிலையான 24 மணிநேரத்தை விட 1.34 மில்லி விநாடிகள் குறைவாக இருந்தது.
- பூமியின் உள் கருவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் வளிமண்டல மற்றும் கடல் அழுத்தத்தில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டது.
- புவியின் கருவமானது மெதுவாக இயங்கும் போது, வெளிப்புற அடுக்குகள் கோண உந்தத்தைப் பேணுவதற்காக சற்று வேகமாகச் சுழல்கின்றன.
- பெருங்கடல் நீரோட்டங்கள், காற்று மற்றும் நிலவின் ஈர்ப்பு விசையும் பூமியின் சுழற்சி மற்றும் நாளின் நீளத்தை பாதிக்கிறது.
- இந்த நேரக் குறைப்பானது, அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காது, ஆனால் அணுக் கடிகாரங்கள் மற்றும் உலகளாவிய புவியிடங்காட்டி அமைப்பு போன்ற துல்லியமான நேரக் கட்டுப்பாட்டை சார்ந்திருக்கும் அமைப்புகளைப் பாதிக்கிறது.
- பூமியின் இது வரையிலான மிகக் குறுகிய நாள், புவியின் சுழற்சி 1.66 மில்லி விநாடிகள் முன்னதாகவே நிறைவடைந்த 2024 ஆம் ஆண்டின் ஜூலை 05 ஆம் தேதி ஆகும்.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மின்சார வாகன பயன்பாட்டு வாய்ப்பு குறித்த அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, "Unlocking a 200 billion Dollar Opportunity: Electric Vehicles in India" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை புது டெல்லியில் வெளியிட்டது.
- மின்சார வாகனப் பயன்பாட்டு ஏற்பினை விரைவுபடுத்துவதற்கான ஊக்கத்தொகை முறைக்குப் பதிலாக கட்டாய மற்றும் ஊக்கத் தொகை நீக்கங்களில் கவனம் செலுத்துவதை இந்த அறிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அதிகமான செயல் திறன் கொண்ட வாகனப் பிரிவுகள் மற்றும் புவியியல் பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது.
- இங்கு நிதி ஆயோக் அமைப்பானது முதல் இந்திய மின்சார வாகனப் போக்குவரத்து குறியீட்டையும் (IEMI) அறிமுகப்படுத்தியது.
- IEMI ஆனது 16 குறிகாட்டிகளின் அடிப்படையில் 100 மதிப்பில் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்குகிறது.
- இந்தக் குறிகாட்டிகள் மூன்று முக்கியக் கருப்பொருள்களின் கீழ் தொகுக்கப் பட்டு உள்ளன:
    - போக்குவரத்து மின்மயமாக்கலில் முன்னேற்றம்,
    - மின்னேற்ற உள்கட்டமைப்புத் தயார்நிலை மற்றும்
    - மின்சார வாகன ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிலை.
- இந்தியா முழுவதும் மின்சார வாகனப் போக்குவரத்தில் உள்ள தேவை சார்ந்த ஏற்பு, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் புதுமைகளைக் கண்காணிக்க இந்தக் குறியீடு உதவுகிறது.




## உலகளாவிய செயற்கை நுண்ணறிவு நகரக் குறியீடு 2025




- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய செயற்கை நுண்ணறிவு நகரக் குறியீட்டில் பெங்களூரு 26வது இடத்தைப் பிடித்தது.
- கவுண்டர்பாயிண்ட் ரிசர்ச் நிறுவனத்தின் குறியீடு ஆனது, செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளில் பெங்களூருவின்

விரைவான வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

- ❖ மும்பை மற்றும் டெல்லி ஆகியவை போக்குவரத்து மேலாண்மை மற்றும் பொதுப் பாதுகாப்பு பயன்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவில் புதுமைகளை உருவாக்குகின்றன.
- ❖ உலகளாவியக் குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்தது, அதைத் தொடர்ந்து சியோல், பெய்ஜிங், துபாய் மற்றும் சான் பிரான்சிஸ்கோ ஆகியவை உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## அன்னதாதா சுகிபாவா திட்டம்

- ❖ ஆந்திரப் பிரதேச மாநிலமானது, அன்னதாதா சுகிபாவா பிரதான் மந்திரி கிசான் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- ❖ இந்தத் திட்டமானது ஆந்திரப் பிரதேச மாநில விவசாயிகளை நிதி ரீதியாக மேம்படுத்துவதையும் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சூப்பர் சிக்ஸ் முன்னேடுப்பானது, மூன்று தவணைகளில் ஆண்டிற்கு 20,000 ரூபாய் வரையிலான நிதி ஆதரவையும், ஓய்வூதிய உயர்வுகளையும், பெண்களுக்கு இலவச சேவைகளையும் உறுதியளிக்கிறது.
- ❖ முக்கியத் திட்டங்களில் போலம் பிலுஸ்தோண்டி, 90% மானியத்துடன் கூடிய சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் விளைச்சலை அதிகரிக்கத் தொழில்நுட்பம் சார்ந்தப் பயிர் ஆலோசனைகள் ஆகியவை அடங்கும்.





## உத்தரகாண்ட் திடீர் வெள்ளம்

- ❖ இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தின் உத்தரக்காஷி மாவட்டத்தில் உள்ள தாராலி கிராமத்தில் மேக வெடிப்பு காரணமாக திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.
- ❖ திடீரென பெய்த மழையால் கீர்கங்கா நதி வேகமாகப் பெருக்கெடுத்து ஓடியதால், சாலைகள், கட்டிடங்கள் மற்றும் கடைகள் வெள்ளத்தில் மூழ்கின.
- ❖ பழங்கால கல்ப்கேதர் கோயில் சேதமடைந்து சேற்றில் மூழ்கியது.
- ❖ இந்த வெள்ளம் ஆனது பாகீரதி நதியைத் தடுத்து, ஒரு செயற்கை ஏரியை

உருவாக்கியதோடு, இது கீழ்நோக்கியப் பாய்வில் அமைந்துள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களை அச்சுறுத்தியது.

❖ திடீர் வெள்ளம் என்பது கனமழை அல்லது மேக வெடிப்புகளால் ஏற்படும் திடீர், தீவிர வெள்ளமாகும் என்பதோடு இது மிக விரைவான நீர் மட்ட உயர்வு மற்றும் கடுமையான சேதத்தை ஏற்படுத்தும் வலுவான நீரோட்டங்களுக்கு வழிவகுக்கிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஷிபு சோரன் மறைவு




❖ ஜார்க்கண்ட் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM) இணை நிறுவனருமான ஷிபு சோரன் காலமானார்.

❖ டிஷோம் குரு அல்லது குருஜி என்று அழைக்கப்படும் இவர், ஜார்க்கண்ட் மாநில உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தார், மேலும் பழங்குடியினரின் உரிமைகள்

மற்றும் சமூக நீதிக்கான முன்னணி ஆதரவாளராகவும் இருந்தார்.

❖ சோரன் மூன்று முறை ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றினார்.

❖ தும்கா தொகுதியிலிருந்து மக்களவை உறுப்பினராக பல முறை தேர்ந்தெடுக்கப் பட்டார்.

❖ 2004 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 24 ஆம் தேதி வரை; 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் தேதி முதல் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் தேதி வரை; மற்றும் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் தேதி முதல் நவம்பர் மாதம் வரை மத்திய நிலக்கரி அமைச்சராகப் பணியாற்றினார்.

❖ 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவர் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

# இதரச் செய்திகள்

## ஆரிய சமாஜ் திருமணங்கள்

❖ சட்டவிரோத ஆரிய சமாஜ் திருமணங்கள் குறித்து விசாரிக்க அலகாபாத் உயர் நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரப் பிரதேச மாநில அரசுக்கு உத்தரவிட்டது.

❖ ஆரிய சமாஜ் அமைப்பானது, 1875 ஆம் ஆண்டில் சுவாமி தயானந்த சரஸ்வதியால் ஓர் இந்து மீட்பு இயக்கமாக அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.

❖ "சுத்தி" (சுத்திகரிப்பு) என்று அழைக்கப்படும் ஒரு செயல்முறை மூலம், பிற சமயங்கள் அல்லது சித்தாந்தங்களைப் பின்பற்றும் மக்களை அதன் வேதகால, ஓரிறைக் கொள்கை சார்ந்த இந்து மதத்திற்கு மாற்ற என ஆரிய சமாஜம் முயற்சிகளை மேற் கொண்டது.

❖ விரைவான திருமணங்களை விரும்பும் தம்பதிகள், குறிப்பாக வெவ்வேறு சாதிகள் அல்லது சமயங்களைச் சேர்ந்தவர்கள், ஆரிய சமாஜத் திருமணங்களை விரும்புகிறார்கள்.

❖ 1937 ஆம் ஆண்டில், "சந்தேகங்களை நீக்கவும்" ஆரிய சமாஜத் திருமணங்களின் செல்லுபடித் தன்மையினை அங்கீகரிக்கவும் ஆரிய திருமணச் சரிபார்ப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

❖ இந்தத் திருமணங்கள் குறிப்பிட்ட இந்து சடங்குகளின்படி நடைபெறுகின்றன, ஆனால் மணமகனும், மணமகளும் திருமண வயதை எட்டியிருக்க வேண்டும் மற்றும் அவர்களின் சாதி அல்லது மதத்தைப் பொருட்படுத்தாமல் தங்களை ஆரிய சமாஜிகள் என்று அறிவிக்க வேண்டும்.


❖ இந்த செயல்முறையானது 30 நாட்கள் அளவிலான பொது அறிவிப்பு மற்றும் முறையான நடைமுறைகளை வலியுறுத்துகின்ற 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தை விட விரைவானது மற்றும் எளிமையானது.

❖ உத்தரப் பிரதேசத்தில், 2021 ஆம் ஆண்டு சட்டவிரோத மத மாற்றத் தடைச் சட்டத்தின் 6வது பிரிவு, சட்டவிரோதமான அல்லது நடைமுறை ரீதியாக இணங்காத மத மாற்றத்திற்கு முந்தைய எந்தவொரு திருமணத்தையும் செல்லாது என்று அறிவிக்கிறது.

❖ இதற்கு, மத மாற்றத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய அறிவிப்புகள் அவசியம் ஆகும், மேலும் இது தன்னார்வ சம்மதத்தைக் காட்டுவதற்கான ஒரு ஆதாரத்தினை முன் வைப்பதற்கான கடமையை குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்துகின்றன.

❖ ஆரிய சமாஜத்தின் சுத்தி சடங்குகள் பெரும்பாலும் இந்த சட்டத் தர நிலைகளை பூர்த்தி செய்யாது என்பதால் இது ஆரிய சமாஜ் திருமணங்களுக்கும், மாநிலச்

சட்டங்களுக்கும் இடையில் மோதல்களை உருவாக்குகிறது.




☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆